# BACCALAURÉATS GÉNÉRAL ET TECHNOLOGIQUE

**SESSION 2018**

# TAMOUL

LANGUE VIVANTE **2**

Série **L** – Durée de l'épreuve : **3 heures** – coefficient : **4**

Séries **ES-S** – Durée de l'épreuve : **2 heures** – coefficient : **2**

Séries **STD2A, STHR, STI2D, STL, ST2S, STMG** – Durée de l'épreuve : **2 heures** – coefficient : **2**

## Épreuve facultative

Toutes séries sauf **STD2A, STI2D, STL, STMG et ST2S** – Durée de l'épreuve : **2 heures**

**Le candidat traitera, dans la langue étrangère, l'ensemble des questions de l'épreuve pour laquelle il compose.**

**Il notera obligatoirement en début de sa copie s'il s'agit de l'épreuve facultative ou de l'épreuve de LV2.**

*L'usage du dictionnaire est interdit.*

Dès que ce sujet vous est remis, assurez-vous qu'il est complet.
Ce sujet comporte 3 pages numérotées de 1/3 à 3/3.

**Répartition des points**

| | |
|---|---|
| Compréhension de l'écrit | 10 points |
| Expression écrite | 10 points |

## DOCUMENT

### புனித மரம்

மனிதரின் தலைவிதி, மரங்களின் தலைவிதியுடன் வலுவாகப் பிணைந்து இருக்கிறது. எனவே, இந்தப் பிணைப்பை முறித்துக்கொள்வதால் மனித குலத்தின் எதிர்காலம் என்ன ஆகுமோ என்று ஒவ்வொரு கண்டத்தின் மக்களும் கவலை கொள்வது இயற்கையே. எது எவ்வாறாயினும், காடுகளை அழிப்பதால், இந்தப் பூமிக்கு ஏற்பட இருக்கும் உண்மையான அபாயத்தைத் தவிர்ப்பதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

பூமியின் மையத்தில் தோன்றி வானுலகு வரை வளர்ந்த மாபெரும் மரம் ஒன்றைச் சுற்றி இந்த உலகமே தோன்றியதாக ஒரு நம்பிக்கை இன்னும் உலகெங்கும் நிலவுகிறது. இம்மரம் மூன்று உலகங்களை இணைத்ததெனக் கருதினார்கள். அதாவது, அதன் வேர்கள் கீழ் உலகையும், கிளைகள் வானுலகையும் இணைத்தனவாம். இம்மரத்தின் காரணமாகத்தான் உயிர்கள் மூச்சு விடக் காற்று கிடைத்தது. அப்போது தோன்றிய உயிரினங்களுக்கு தன் வேரால் கிடைத்த நீரையும் சூரிய ஒளியையும் கொண்டு, பழுத்த தன் பழங்களை இந்த மரம் கொடுத்தது. விண்ணிலிருந்து மின்னலை எடுத்து மனிதனுக்குத் தீயாக மாற்றிக் கொடுத்தது. தன் உச்சியைத் தொட்ட மேகங்களை உயிர் காக்கும் மழையாக மாற்றித் தந்தது. அந்த மரம், உயிர்களின் பிறப்பிடமாக, மீண்டும் உயிர்த்தலின் அடிப்படையாக விளங்கியது. எனவே தான், பண்டை நாள் முதலாக, மரங்கள் வழிபாட்டிற்கு உரியனவாக இருந்தன என்பதில் வியப்பு ஏதுமில்லை. இந்தியாவில், அரச மரம், பிரம்மன் என்ற கடவுளுக்கு இணையாகப் போற்றப் படுகிறது. அதன் கீழ் அமர்ந்து தான் கௌதம புத்தர் அறிவொளி பெற்றதாகவும் கூறப் படுகிறது. பெரும்பாலோர் நம்பிக்கையின் படி, மரங்கள் கடவுள்களின் உறைவிடமாகக் கருதப்பட்டு புனிதமாகப் போற்றப்படுகிறது.

எல்லா மரங்களிலும் ஓர் ஆன்மா இருப்பதாகக் கருதப்பட்டது. இவற்றில் சில வன தேவதைகளின் ஆவிகள் வாழ்வதாக கிரேக்க நாட்டிலும் வேறு பல நாடுகளிலும் கருதப்படுகின்றன. எனவே, இந்த தேவதைகளை, மரங்களிலிருந்து போய்விடும்படி வேண்டிக்கொண்ட பின்னரே, அவற்றை வெட்ட முடியும். புனித மரங்களை வெட்டுவோருக்கு ஒரு காலத்தில் மரண தண்டனையே அளிக்கப்பட்டது...

(அறிவியல் இதழ்– நவம்பர் 2013– அமுதன் எழுதிய « புனித மரம் » கட்டுரையின் ஒரு பகுதி)

# TRAVAIL À FAIRE PAR LE CANDIDAT

## I. COMPRÉHENSION DE L'ÉCRIT : (10 points)

1. எல்லா மக்களின் கவலை என்ன? அதைப் போக்க என்ன செய்ய வேண்டும்?
2. உலகம் முழுவதும் நிலவும் நம்பிக்கை எது?
3. மரங்கள், வழிபாட்டிற்கு உரியனவாக இருப்பது, எப்போதிலிருந்து? அது ஏன்?
4. இந்தியாவில் அரச மரத்தின் சிறப்பு யாது ?
5. சில நாடுகளில், ஒரு மரத்தை வெட்டும் முன் என்ன செய்ய வேண்டும்? ஏன்?

## II. EXPRESSION ÉCRITE : (10 points)

**Afin de respecter l'anonymat de votre copie, vous ne devez pas signer votre composition, citer votre nom, celui d'un camarade ou celui de votre établissement.**

**Les candidats de la série L doivent traiter les <u>DEUX</u> questions. (120 mots minimum pour chaque question)**

**Les candidats des autres séries traitent <u>UNE</u> question au choix. (150 mots minimum)**

1. காடுகளை அழிப்பதால் ஏற்படும் அபாயங்கள் யாவை? எடுத்துகாட்டுகள் தந்து விளக்குக.
2. மரங்கள் தெய்வீகமானவை என்று கருதுவது அறிவியலுக்கும் நாகரிகத்தின் பகுத்தறிவுக்கும் புறம்பானதல்லவா? தங்கள் கருத்துகளை தொகுத்து எழுதுக.